நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.25.07.2022.

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் ஜுலை– 2022ம் அவசர கூட்டம் வருகிற 27.07.2022 தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**தலைவர்**
**ஆத்தூர் நகராட்சி.**

**பொருள்கள்**

1. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள தூய்மை பணியாளர்கள் மூலம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் குப்பைகளை தரம் பிரித்து பிளாஸ்டிக், டீ கப் போன்றவற்றை மறுசுழற்சி முறையில் பொருட்களை பேக் செய்து அரியலூர் சிமெண்ட் கம்பெனிக்கு அனுப்புவதற்காக தேவைப்படும் கிளிப் மற்றும் ரோல் நாடா தேவைக்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.19, நாள்.29.04.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | |
|---|---|---|
| 1 | சன்பிரைட்டுல்ஸ்,<br>79/13, முகப்பேர் சாலை, மன்னூர்<br>சென்னை–50 | 1 கிலோ ஊக்கு ஒன்றின் விலை ரூ.315/–<br>ரோல் நாடா ஒன்றின் விலை ரூ.405/– |
| 2 | மெஸர்ஸ்.ராணி எண்டர்பிரைஸஸ்,<br>2/45, தங்கசாலை தெரு, திருத்தணி. | ஊக்கு ஒரு கிலோ ஒன்றின் விலை ரூ.380/–<br>ரோல் நாடா ஒன்றின் விலை ரூ.485/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் சன்பிரைட்டுல்ஸ், சென்னை நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் (1001/2022/எச்1)

**தீர்மானம் எண். 110. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

2. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்நிநகர் ஜெயம் கேஸ் கம்பெனி அருகில் திரு.விஜய சரவணன் த/பெ.தங்கவேல் வீட்டின் முன்புறம் உயிரற்று பட்டுபோன நிலையில்

உள்ள காய்ந்த முள்ளு மரங்களை அகற்றுவதற்கு ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களது கடிதத்தில் (ந.க.எண்.3604/2022/அ4, நாள்.13.06.2022) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மரங்களை ஏலம் விடும் வகையில் காலவரையறையுடன் கூடிய அறிவிப்பினை விளம்பரப்படுத்தி அம்மரத்திற்கான ஏலத்தொகையினை உரிய அரசு தலைப்பில் செலுத்துமாறும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மரங்களை ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று ஏலம் விடுவதற்கு அறிவிப்பு வெளியிட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (1559/2022/எச்1)

**தீர்மானம் எண். 111. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

3. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை நகராட்சியிடம் ஒப்படைத்து விட்டதால், மேற்படி செலுத்தப்பட்ட குத்தகை வைப்புத் தொகையினை திருப்பி வழங்கிட கோரியுள்ளார். அன்னாரது வைப்புத் தொகை காலங்கடந்த வைப்பு பதிவேட்டில் வரவாக்கப்பட்டுவிட்டதால், தொகை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **விவரம்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலைய கிழக்குபுற கடை எண்.7 (வரிவிதிப்பு எண்.1) | 22539/- |
| 2 | தினசரி அங்காடி கடை எண்.30 (வரிவிதிப்பு எண்.455) | 23437/- |
| 3 | புதிய பேருந்து நிலையம் கடை எண்.64 (வரிவிதிப்பு எண்.266) | 62800/- |
| 4 | தினசரி அங்காடி கடை எண்.31 (வரிவிதிப்பு எண்.8454) | 17786/- |
| | **மொத்தம்** | **126562/-** |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் நடத்தப்பட்டு விட்டதாலும், குத்தகை பாக்கி ஏதும் நிலுவையில் இல்லை என்பதால் மேற்படி வைப்புத் தொகையினை திருப்பி வழங்கலாம் என்ற வருவாய் ஆய்வாளர், திரு.எஸ்.நாகராஜ், ஆத்தூர் நகராட்சி என்பவரது குறிப்பினை மன்றம் அனுமதிக்கலாம். வைப்புத் தொகையினை திரு.அ.வேல்முருகன், 29, இராமர் தெரு, ஆத்தூர் என்பவருக்கு திருப்பி வழங்கலாம். (ந.க.எண்.1968/2022/அ3).

**தீர்மானம் எண். 112. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பவள விழா கட்டிடம் கடை எண்.22ஐ நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டதால், வைப்புத் தொகையினை திருப்பி வழங்கிட கோரி திருமதி.ஏ.ராஜேஸ்வரி க/பெ.அங்கப்பன், 31, இராமர் தெரு, குத்தகைதாரர், ஆத்தூர் என்பவர் கோரியுள்ளார். மேற்கண்ட வைப்புத் தொகை ரூ.45310/-ஐ நகராட்சி காலங்கடந்த வைப்பு பதிவேட்டில் வரவாக்கப்பட்டு விட்டதால், தெகையினை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட குத்தகைதாரர் கடை எண்.22ஐ நகராட்சிக்கு 31.03.2022 அன்று ஒப்படைத்துள்ள நிலையில் மேற்படி கடைக்கு குத்தகை பாக்கி ஏதுமில்லை என்பதால் வைப்புத் தொகை ரூ.45310/—ஐ திருமதி.ஏ.ராஜேஸ்வரி க/பெ.அங்கப்பன்(லேட்), குத்தகைதாரர் என்பவருக்கு திருப்பி வழங்கலாம். (ந.க.எண்.1715/2022/அ3)

**தீர்மானம் எண். 113. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

5. இந்நகராட்சியின் எரிவாயு தகனமேடை அமைத்து தரும் ஒப்பந்தபணியினை மெஸர்ஸ்.ஜெனரல் என் பைரோடெக்சி) கோவை, நிறுவனத்தாரால் செய்து முடிக்கப்பட்டது. இதன் மதிப்பீட்டு தொகை 90,00,000/—(தொன்னூறு இலட்சம் மட்டும்)ல் கடந்த 2011—2012ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் தமக்கு வழங்கப்பட வேண்டிய 1% வைப்புத் தொகை ரூ.90,000/— (தொன்னூற்று ஆயிரம் மட்டும்) திருப்பி வழங்க கோரியுள்ளார். அதன்படி தொகையினை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட தொகையினை வழங்கிட ஒப்பந்ததாரர், கோவை நுகர்வோர் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்து இவ்வழக்கின் பிரதிவாதியாக இந்நகராட்சியினை சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வழக்கினை முடிக்கும் பொருட்டு 1% வைப்புத் தொகை ரூ.90,000/—, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3408/2022/அ3)

**தீர்மானம் எண். 114. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

6. பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்—TN 30 T 7161க்கு தகுதிசான்று பெறும் பொருட்டு பழுதுகள் நிவர்த்தி செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 1,40,000/—க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.60, நாள்—27.05.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 15.07.2022ல் முதன்முறையாக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது.

| | | |
|---|---|---|
| 1) | எஸ்.கே. மோட்டார்ஸ்,<br>சேலம் மெயின் ரோடு,<br>தச்சூர் குறுக்கு தெரு,<br>கள்ளக்குறிச்சி. | பழுதுகளை நிவர்த்தி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,39,250/— (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) |
| 2) | ராகவேந்திரா மோட்டார்ஸ்,<br>2/3, சென்னை மெயின் ரோடு,<br>விழுப்புரம் | பழுதுகளை நிவர்த்தி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,48,200/— (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து இருநூறு மட்டும்) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் எஸ்.கே. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1352/2022/எச்1)

**தீர்மானம் எண். 115. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

7. பொது சுகாதாரப்பிரிவு லாரி எண்–TN 77 L 5857–க்கு புதியதாக மின்கலன்கள் மற்றும் புதியதாக டயர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 27,800/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்–82, நாள்–30.06.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 15.07.2022ல் முதன்முறையாக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது.

| | | |
|---|---|---|
| 1) | எஸ்.கே. மோட்டார்ஸ்,<br>சேலம் மெயின் ரோடு,<br>தச்சூர் குறுக்கு தெரு,<br>கள்ளக்குறிச்சி. | ஒரு மின்கலன் மற்றும் நான்கு டயர்கள் விநியோகம் செய்ய ஆகும் செலவினம் ரூ.27,800/– (ரூபாய் இருபத்தி எழாயிரத்து எட்டு நூறு மட்டும்) |
| 2) | ராகவேந்திரா மோட்டார்ஸ்,<br>2/3, சென்னை மெயின் ரோடு,<br>விழுப்புரம் | ஒரு மின்கலன் மற்றும் நான்கு டயர்கள் விநியோகம் செய்ய ஆகும் செலவினம் ரூ. 29,750/– (ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் எஸ்.கே. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1815/2022/எச்1)

**தீர்மானம் எண். 116. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

8. பொது சுகாதாரப்பிரிவு லாரி எண்–TN 77 L 5857–ல் தகுதிச்சான்று புதுப்பிக்க பழுதுகள் சரி செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 1,30,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.78, நாள்–30.06.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 15.07.2022ல் முதன்முறையாக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | எஸ்.கே. மோட்டார்ஸ்,<br>சேலம் மெயின் ரோடு,<br>தச்சூர் குறுக்கு தெரு,<br>கள்ளக்குறிச்சி. | தகுதிசான்று புதுப்பிக்க பழுதுகள் சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,29,050/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்து ஐம்பது மட்டும்) |

| | | |
|---|---|---|
| 2) | ராகவேந்திரா மோட்டார்ஸ்,<br>2/3, சென்னை மெயின் ரோடு,<br>விழுப்புரம் | தகுதிசான்று புதுப்பிக்க பழுதுகள் சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,32,250/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் எஸ்.கே. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1817/2022/எச்1)

**தீர்மானம் எண். 117. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

9. பொது சுகாதாரப்பிரிவு லாரி எண்–TN 30 T 7162–க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுதுகள் நிவர்த்தி செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 1,60,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.79, நாள்–30.06.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 15.07.2022ல் முதன்முறையாக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது.

| | | |
|---|---|---|
| 1) | எஸ்.கே. மோட்டார்ஸ்,<br>சேலம் மெயின் ரோடு,<br>தச்சூர் குறுக்கு தெரு,<br>கள்ளக்குறிச்சி. | தகுதிசான்று புதுப்பிக்க பழுதுகள் சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,59,800/– (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரத்து எட்டு நூறு மட்டும்) |
| 2) | ராகவேந்திரா மோட்டார்ஸ்,<br>2/3, சென்னை மெயின் ரோடு,<br>விழுப்புரம் | தகுதிசான்று புதுப்பிக்க பழுதுகள் சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,68,060/– (ரூபாய் ஒரு லட்சத்து ஆறுபத்தி எட்டாயிரத்து அறுபது மட்டும்) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் எஸ்.கே. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 118. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

10. பொது சுகாதாரப்பிரிவு லாரி எண்–TN 77 L 5837–க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுதுகள் நிவர்த்தி செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 1,40,000/–க்கு நகர்மன்ற

தீர்மானம் எண்–80, நாள்–30.06.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 15.07.2022ல் முதன்முறையாக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது.

| | | |
|---|---|---|
| 1) | எஸ்.கே. மோட்டார்ஸ்,<br>சேலம் மெயின் ரோடு,<br>தச்சூர் குறுக்கு தெரு,<br>கள்ளக்குறிச்சி. | தகுதிசான்று புதுப்பிக்க பழுதுகள் சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,39,680/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரத்து ஆறுநூற்று எண்பது மட்டும்) |
| 2) | ராகவேந்திரா மோட்டார்ஸ்,<br>2/3, சென்னை மெயின் ரோடு,<br>விழுப்புரம் | தகுதிசான்று புதுப்பிக்க பழுதுகள் சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 1,46,200/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து இருநூறு மட்டும்) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் எஸ்.கே. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1879/2022/எச்1)

**தீர்மானம் எண். 119. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

11. பொது சுகாதாரப்பிரிவு லாரி எண்–TN 77 L 5837–க்கு புதியதாக மின்கலன் மற்றும் புதியதாக நான்கு டயர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 27,800/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்–81, நாள்–30.06.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 15.07.2022ல் முதன்முறையாக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது.

| | | |
|---|---|---|
| 1) | எஸ்.கே. மோட்டார்ஸ்,<br>சேலம் மெயின் ரோடு,<br>தச்சூர் குறுக்கு தெரு,<br>கள்ளக்குறிச்சி. | புதியதாக மின்கலன் மற்றும் புதியதாக நான்கு டயர்கள் விநியோகம் செய்ய ஆகும் செலவினம் ரூ. 27,800/– (ரூபாய் இருபத்தி எழாயிரத்து எட்டு நூறு மட்டும்) |
| 2) | ராகவேந்திரா மோட்டார்ஸ்,<br>2/3, சென்னை மெயின் ரோடு,<br>விழுப்புரம் | புதியதாக மின்கலன் மற்றும் புதியதாக நான்கு டயர்கள் விநியோகம் செய்ய ஆகும் செலவினம் ரூ. 29,950/– (ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் எஸ்.கே. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1879/2022/எச்1)

**தீர்மானம் எண். 120. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

12. பொது சுகாதாரப்பிரிவிற்கு தள்ளுவண்டி, பேட்டரி வண்டிக்கு 50 லிட்டர் கொள்ளவு கொண்ட டப்பாக்கள் மற்றும் தள்ளுவண்டிக்கு முன்வீல், பின்வீல் வண்டி சக்கரம் விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 9,50,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்–76, நாள்–27.05.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 15.07.2022ல் முதன்முறையாக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | சன்பிரைட் டூல்ஸ், 79/13, முருகப்பர் சாலை, மன்னூர் பேட்டை, சென்னை–50. | தள்ளுவண்டிக்கு 50 லி கொள்ளவு கொண்ட டப்பா ஒன்றின் விலை | ரூ. 1,100/– (ரூபாய் ஆயிரத்தி நூறு மட்டும்) |
| | | பேட்டரி வண்டிக்கு 50 லி கொள்ளவு கொண்ட டப்பா ஒன்றின் விலை | ரூ. 1,950/– (ரூபாய் ஆயிரத்தி தொள்ளாயிரத்தி ஐம்பது மட்டும்) |
| | | தள்ளுவண்டிக்கு முன்வீல், பின்வீல் ஒன்றின் விலை | ரூ. 3,680/– (ரூபாய் முவாயிரத்தி ஆறு நூற்றி எண்பது மட்டும்) |
| 2) | ராணி எண்டர்பிரைசஸ், மடூர், திருத்தணி. | தள்ளுவண்டிக்கு 50 லி கொள்ளவு கொண்ட டப்பா ஒன்றின் விலை | ரூ. 1,430/– (ரூபாய் ஆயிரத்தி நானூற்றி முப்பது மட்டும்) |
| | | பேட்டரி வண்டிக்கு 50 லி கொள்ளவு கொண்ட டப்பா ஒன்றின் விலை | ரூ. 2,535/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்தி ஐந்து மட்டும்) |
| | | தள்ளுவண்டிக்கு முன்வீல், பின்வீல் ஒன்றின் விலை | ரூ. 4,790/– (ரூபாய் நான்காயிரத்து எழுநூற்று தொண்ணூறு மட்டும்) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் சன்பிரைட் டூல்ஸ், சென்னை அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1950/2022/எச்1)

**தீர்மானம் எண். 121. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

13. ஆத்தூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் நடைமுறைப்படுத்தும் பொருட்டு தீவிர தூய்மைப்பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நகராட்சி எல்லைக்குட்பட்ட நான்கு இடங்களில் நடத்துவதற்கு கலைக்குழு

நிறுவனங்களிடம் இருந்து 08.07.2022ந் தேதி விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | சிவசக்தி கிராமிய கலைக்குழு, வள்ளலார் குடில், சாய்ராம் நகர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம். | விழிப்புணர்வு முகாம் நான்கு இடங்களில் நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.20000/– |
| 2 | ஜெயம் கலைக்குழு, நெ.3, பாரதி தெரு, கிருஷ்ணகிரி. | விழிப்புணர்வு முகாம் நான்கு இடங்களில் நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.21000/– |
| 3 | உதயம் கலைக்குழு, நெ.73, சாய்பாபா நகர், தருமபுரி. | விழிப்புணர்வு முகாம் நான்கு இடங்களில் நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.23000/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சிவசக்தி கிராமிய கலைக்குழு, சாய்ராம் நகர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு (நாள் ஒன்றுக்கு நான்கு இடங்களுக்கு ரூ.20,000/–) விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நான்கு இடங்களில் நடத்துவதற்கும் அதற்குரிய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், செலவினத்தை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 122. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**14.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரகனூர் ரோடு சாலை அருகே உள்ள இடுகாட்டில் உள்ள சாய்ந்த நிலையில் உள்ள மரங்களையும், நகராட்சி அலுவலகம் பின்புறம் உள்ள அறுக்கப்பட்ட நிலையில் உள்ள பலதரப்பட்ட மரங்களையும் பொது ஏலம் மூலம் ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மரங்களுக்கான மதிப்பு நிர்ணயம் செய்து ஏலம் விட்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1559/2022/எச்1)

**தீர்மானம் எண். 123. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**15.** இந்நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகள் தமற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள், தூய்மை செய்யும் பணிக்கு வெளிக்கொணர்வு மூலம் (Out Sourcing) பணிபுரிந்துவரும் 6 தூய்மை பணியாளர்கள் பணிக்காலம் 31.03.2022ந் தேதியில் முடிவு பெற்றுள்ளது. மேலும் பள்ளிகளில் தூய்மை பணியாக

உளள்தால் தொடர்ந்து மேற்படி ஆறு பணியாளர்கள் தூய்மை பணியாக உள்ளதால், தொடர்ந்து மேற்படி ஆறு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் ஏப்ரல்–2022 முதல் ஜூலை–2022 முடிய தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்தமைக்கான பின்னேற்பும் எற்கனவே வெளிகொணர்வு மூலம் ஊதியம் வழங்க அனுமதிக்கப்பட்ட ஏ.ஆர்.கண்ஸ்ட்ரக்சன், நடுவலூர் ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்தமைக்கான ஊதியம் வழங்கவும், அதற்குரிய செலவினம் கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் ஆகஸ்டு–2022 முதல் ஆறு மாத காலத்திற்கு மேற்படி பள்ளிகளில் தூய்மை பணியாளர்கள் பணிபுரிவதற்கு வெளிகொணர்வு மூலம் (Out Sourcing) ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் முலம் அல்லது மகளிர் சுயஉதவிக்குழு மூலம் மேற்கொளள்வும் அதற்குரிய செலவினம் நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொ.ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் பணி உத்திரவு வழங்கும் வரை பழைய ஏ.ஆர்.கண்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் மூலம் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 124. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**16.** ஆத்தூர் நகராட்சி பகுதியிலுள்ள 33 வார்டுகளில் 2154 எண்ணிக்கை தெரு விளக்குகள் தற்போது உள்ளன. மேற்படி தெருவிளக்குகளை ஆத்தூர் நகராட்சியால் தொடர்ந்து பழுது நீக்கம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்கு பணியாளர்கள் வயது முதிர்வு காரணமாகவும் மற்றும் பணியின் போது இறந்து விட்டதால் மேற்படி பணியிடங்கள் தொடர்ந்து நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளதால் தற்சமையம் ஒரு மின் கம்பி உதவியாளர் மட்டுமே பணியில் உள்ளார். மேற்படி தெரு விளக்குகளை பராமரிக்கஅரசு நிர்ணய அளவுகோலின்படி மின் கம்பியாளர்கள் மற்றும் மின் கம்பி உதவியாளர்கள் இல்லாதாலும், குடிநீர் பணியிடங்களில் உள்ள மின்சாதனங்களை பரமரித்து இயக்க உரிய தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும் குடிநீர் பணியாளர்கள் மற்றும் தெருவிளக்கு பரநீமரிப்பு பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும்,குடிநுர் பணிகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளின் அவசியம் கருதி மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் வசம் ஒப்படைத்து பணிகள் மேற்கொள்ள முதல் ஓராண்டிற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.33.72 இலட்சமும், இரண்டாம் ஆண்டிற்கு ரூ. 35.41 இலட்சமும் , மூன்றாம் ஆண்டிற்கு ரூ.37.18 இலட்சத்திற்கு தனிஅலுவலர் தீர்மானம் எண் 168, நாள் 04.09.2020ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5878/2020/DO, நாள்13.10.2020ன்படி இப்பணிக்கு 11.12.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S P&B Enter prises Contractor . 1H Satkhi Nagar 46, udhur, Erode, என்ற நிறுவனத்திற்கு தனிஅலுவலர் தீர்மானம் எண் 276, நாள் 31.12.2020ல் ஒப்புதல் வழங்கியதனபேரில் மேற்படி பணிக்கு 06.01.2021,ல வேலை உத்தரவு வழங்கப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்றுவருகிறது.

தற்போது நகராட்சி நிர்வாகம் குடிநீர் ,தெருவிளக்கு மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய பணிகளுக்கு வெளிமுகமை மூலமாக பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளதால் தற்சமயம் இப்பணிக்குரிய ஓராண்டு காலம் 05.01,222ல் முடிவடைந்துள்ளதால் 06.01.2022 முதல் 07.06.2022 வரை ஆறு மாதத்திற்கு இதே ஒப்பந்ததாரரை

கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலை விதித்தில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தீர்மானம் எண்.261, நாள் 06.12.2021ல் ரூ .18.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியதன்பேரில் பணிகள் செய்யப்பட்டுள்ளதால் நாளது வரை மேற்படி பணிகளுக்கான கோப்பு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் நடவடிக்கையில் உள்ளதால் அதுவரையில் 06.07.2002 முதல் 05.12.2022வரை ஆறு மாத காலத்திற்கு இதே ஒப்பந்ததாரரை கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலை விதித்தில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளரூ.18.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.'

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியினை06.07.202முதல் 05.12.2022வரை ஆறு மாத காலத்திற்கு இதே ஒப்பந்ததாரரை கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலை விதித்தில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளரூ..18.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்2379/2020/இ1).

**தீர்மானம் எண். 125. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

17. ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் பிரிவு, பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு, நகரமைப்பு பிரிவு, கணினி பிரிவு , தேர்தல் பிரிவு மற்றும் காசாளர் பிரிவு ஆகிய அறைகளில் உள்ள 30 கணினிகள், 26 பிரிண்டர்கள், லேப்டேப் மற்றும் சி.சி டி.வி கேமாக்கள் மற்றும் ஸ்கேணர் ஆகியன 01.07.2022 முதல் 30.06.2023 முடிய கணினிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் (AMC) மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினம் ரூ.2,50,000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 08.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S Spyder Technology, Salem | 0.40%(-) மதிப்பீட்டுவிலையைவிட குறைவு |
| 2 | M/S Digi Print & Service, salem | 0.54%(+) மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Spyder Technology, Salem என்பவரின் 0.40%(-) மதிப்பீட்டுவிலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Spyder Technology, Salem என்பவரின் **0.40%(-)** மதிப்பீட்டுவிலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். குறைந்த விலை கொடுத்துள்ளனை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.2265/2022/இ1)

**தீர்மானம் எண். 126. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

18. மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் ஆகியோர்களின் அறிவுரைகளின்படி ஆத்தூர் நகராட்சியில் நடைபெற்ற வரும் மற்றும் முடிவுற்ற திட்ட பணிகள் குறித்த விபரங்கள் அடங்கிய புகைப்படங்கள் பொதுமக்கள் அறியும் வகையில் மற்றும் ஏற்காடு கோடை விழா ஸ்டால் அமைத்தல் ஆகிய பணிகளை பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி பிரிவு 15ன்கீழ் செய்தமைக்கு ஆனசெலவினம் ரூ.19,600/-ஐ மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.2376/2022/இ1)

**தீர்மானம் எண். 127. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

19. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி எண்TN.77.P.2585 பழுதடைந்துள்ளதுள்ளதால் மேற்படி வாகனத்தை தொடர்ந்து இயக்க முடியாமல் இருப்பதினை பழுது நீக்கம் செய்தல் பணிக்கு ரூ.1.80 இலட்சம் மதீப்பீட்டிற்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 08.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | விலைவிபரம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S.J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் களரம்பட்டி ரோடு சேலம்–15 | ரூ.179600/–மதிப்பீட்டு விலையைவிடகுறைவு |
| 2 | திரு.யோகமோட்டார்ஸ் தமிழ்சங்கம் ரோடு சேலம்–7 | ரூ.197100/–மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் களரம்பட்டி ரோடு சேலம்–15 என்பவரின் மதிப்பீட்டை விட குறைந்த விலை கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலை கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/S.J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் களரம்பட்டி ரோடு சேலம்–15 என்பவரின் குறைந்த விலை கொடுத்துள்ளனை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம் ( .ந.க.எண்.2266/2022/இ1)

**தீர்மானம் எண். 128. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

20. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி எண் TN 27.Z6407ன் பழைய வாகனத்தின் ஆயில் என்ஜீன் பழுது ஏற்பட்டுள்ளதை பழுது நீக்கம் மற்றும் ஆயில் என்ஜின் சர்வீஸ்

செய்து புதிய குடிநீர் வாகனம் எண்.TN.77.P-2585ல் பொருத்த வேண்டியுள்ளதால் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீரின் அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 1920 விதி 15ன் கீழ் மேற்படி பழைய வாகனத்தின் ஆயில் என்ஜீன் பழுது ஏற்பட்டுள்ளதை பழுது நீக்கம் மற்றும் ஆயில் என்ஜின் சர்வீஸ் செய்து புதிய குடிநீர் வாகனம் எண்.TN.77.P-2585ல் பொருத்தியமைக்கு ஆனசெலவினம் ரூ.58,000/-ம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.2265/2022/இ1)

**தீர்மானம் எண். 129. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

21. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.30ல் உள்ள சிமெண்ட் சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதிகளில் செல்லும் வயதான மற்றும் குழந்தைகள் இரவு நேரங்களில் செல்லும் போது விபத்து ஏற்படுகிறது மேலும் விரைவில் அப்பகுதியிலுள்ள மாரியம்மன் தேர் அவ்வழியாக சுற்றிவர உள்ளதால் அப்பகுதியில் பழுதடைந்த சிமெண்ட் சாலையினை சரி செய்ய ஆகும் தோராய செலவினத்திற்கு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம் .

**தீர்மானம் எண். 130. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

22. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பைத்தூர்ரோடு பகுதியில் உள்ள குப்பை மேடு பகுதியில் உள்ள குப்பைகளை அகற்றும் பணி முழுவதுமாக நிறைவடைய உள்ளது. எனவே அதில் பொருத்தப்பட்டுள்ள குப்பைகளை பிரித்தெடுங்கும் இரண்டு இயந்திரங்களில் ஒரு இயந்திரத்தை மட்டும் அப்பம சமுத்திரம் குப்பை கிடங்கிற்கு மாற்றி பொருத்தவும் அதற்கான மின் அறை மற்றும் அருகிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்த ஆகும் செலவினத்திற்கு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய்/அரசின் இதரதிட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 131. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

23. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்2294/2022/பி, நாள்.05.07.2022 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வருகையொட்டி சேலம் மாவட்டத்திலுள்ள ஆறு ஆத்தூர், நரசிங்கபுரம், இடைப்பாடி,மேட்டூர், தாரமங்கலம், இடங்கணசாலை ஆகிய நகராட்சியில் நடைபெற்றுவரும் திட்டப்

பணிகளின் விபரங்களை தொகுத்து காலைக்கதிர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரகட்டணம் ரூ.114829/—ஐ விளம்பரம் செய்த நிறுவனமான காலைக்கதிர் நாளிதழிலுக்கு ஆத்தூர் நகராட்சியால் தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. விளம்பரம் செய்த காலைக்கதிர் நாளிதழிலுக்கு விளம்பர கட்டணம் செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேலும் இதர ஐந்து நகராட்சிகளிடமிருந்து அந்தந்த நகராட்சிகளின் பங்குத் தொகையாக தலா ரூ19,139/—ஐ ஆத்தூர் நகராட்சிக்கு வழங்க கோரி கடிதத்தின் வாயிலாக கோரப்பட்டுள்ளதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 2597 /2022/இ2)

**தீர்மானம் எண். 132. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

24. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் இருந்து மக்கள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் இரும்பு பைப்புகள் பொருத்தப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பைப்புகள் அமைத்து பல வருடங்கள் ஆன நிலையில் தற்பொது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட வார்டுகளில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள ஜி.ஐ. பைப்களை மாற்றி அமைத்தல் பணிக்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.29, நாள்.29.04.2022ல் ரூ.7.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு18.05.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு .ஆர். செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர்ஆத்தூர் | 1.29% மதிப்பீட்டுவிலையைவிட அதிகம் |
| 2 | திரு. எ.லோகநாதன் ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.07%மதிப்பீட்டுவிலையைவிட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர். செல்லக்கண்ணு, ஆத்தூர் என்பவரின் 0.07% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.07% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செல்லக்கண்ணு, ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2.மேற்படி பணிக்கு கடந்த 30.06.2022ம் தேதிய தீர்மானம் எண்83ல் தட்டச்சு பிழையின் காரணமாக குறைந்த விலை கொடுத்துள்ள திரு. எ.லோகநாதன் என்பருக்கு பதிலாக திரு.ஆர்.செல்லக்கண்ணு என்று தவறாக பதியப்பட்டுள்ளதால் அதனை திருத்தி திரு.எ.லோகநாதன் என்பருக்கு நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்

அனுமதி பெற்று பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கயதையும், மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1605 /2022/இ2)

**தீர்மானம் எண். 133. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**25.** புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்திற்கு மாநில அளவில் SNA வங்கி கணக்கு துவக்கப்பட உள்ளதாவும், இயக்குநர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அவர்களின் கடிதத்தின்படி ஆத்தூர் நகராட்சி பள்ளி சத்துணவு திட்டத்திற்கு SNA (Single Nodal Account) கணக்கில் மாற்றம் செய்து மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி திட்ட கணக்கிற்கு DSC (Digital Signature Combo) ஆணையரின் பெயரில் பெற வேண்டியுள்ளது. திரு.பு.பொன்னம்பலம், ஓய்வு பெற்ற நகராட்சி ஆணையாளர் மற்றும் திருமதி.மு.ரா.வசந்தி என்ற பெயரிலும் DSC பெறப்பட்டுள்ளது. மேற்படி DSC-க்கு ரூ.3000/– வீதம் ரூ.6000/– SCS Corporate Solutions சென்னை அவர்களுக்கு வழங்க கோரி பட்டியல் வழங்கியுள்ளனர். தொகை ரூ.6000/– பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

அவசர அவசியத்தை முன்னிட்டு தொகை ரூ.6000/– வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 134. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**26.** இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி வாகனம் எண் TN.27- X.4388 பழுது ஏற்பட்டு தொடர்ந்து வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளதால் அதனை பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளதாலும் மேற்படி வாகனத்தின் தகுதி சான்று காலம் முடிவடைய உள்ளதால் மேலும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்து தகுதி புதுப்பித்தல் பணிக்கு ரூ.2.95 இலட்சம் மதீப்பீட்டிற்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 20.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | விலைவிபரம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S.J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் களரம்பட்டி ரோடு சேலம்–15 | ரூ.2,93,600/–மதிப்பீட்டு விலையைவிடகுறைவு |
| 2 | திரு.யோகமோட்டார்ஸ் தமிழ்சங்கம் ரோடு சேலம்–7 | ரூ.3,10,500/–மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் களரம்பட்டி ரோடு சேலம்–15 என்பவரின் மதிப்பீட்டைவிட குறைந்த விலை கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலை கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/S.J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் களரம்பட்டி ரோடு சேலம்–15 என்பவரின் குறைந்த விலை கொடுத்துள்ளனை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம் ( .ந.க.எண்.1439/2022/இ1)

**தீர்மானம் எண். 135. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

27. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.18ல் பாரதியார் தெரு பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின்போது பொதுமக்களுக்கு குடிநீர் சரியாக வருவதில்லை. எனவே இதனை சரி செய்து தடையின்றி அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக கடைவீதி மெயின் ரோட்டில் இருந்து அம்பலத்தாடி வாத்தியார் தெரு வழியாக பாரதியார் தெருவிற்கு புதியதாக 6'' பி.வி.சி குடிநீர் குழாய் அமைக்க ஆகும் தோராய செலவினத்திற்கு ரூ.2,75,000/–க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2676/2022/இ1)

**தீர்மானம் எண். 136. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

28. இயக்குநர், தமிழ்நாடு நகரயியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2020/அ2, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் நேர்முக கடிதம் எண்.2719/2022/அ3, நாள்.29.06.2022 ஆகிய கடிதங்களில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா தொகை 2019–2020 வரை நிலுவை ரூ.1,80,000/– 2020–2021 ரூ.9,00,000/– மற்றும் 2021–2022 ரூ.1,25,000/– மொத்தம் தொகை ரூ.3,95,000/–ஐ வங்கி வரைவோலையாக உடன் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் தொகை ரூ.3,95,000/–ஐ தமிழ்நாடு நகரயியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் நிறுவனத்திற்கு செலுத்தவும் மற்றும் இதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.458/2016/சி1)

**தீர்மானம் எண். 137. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

29. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் திடக்கழிவுகளை தரம்பிரித்து நான்கு நுண்உரம் தயாரிக்கும் மையத்திற்கும் அனுப்பப்பட்டு வருகின்றது. இதில் நான்காவது நுண்உரம் தயாரிக்கும் மையத்தில் காய்கறி தோட்டம்அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அத்தோட்டத்திற்கு தேவையான தண்ணீர் விடும் குழாய் ( Plastic pipe ) பழுது அடைந்துளளதால், புதியதாக 1 இஞ்ச் அளவில் 50 அடி நீளம் வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ.4500/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2399/2022/எச்1)

**தீர்மானம் எண். 138. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

30. இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் அனுதினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை நகராட்சி தென்னங்குடிபாளையம் உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. தற்பொழுது உரக்கிடங்கு நிரம்பி விட்டதால் குப்பை கழிவுகளை கொட்டுவதற்கு சிரமமாக உள்ளது. எனவே உரக்கிடங்கில் உள்ள கழிவுகளை அப்புறப்படுத்த ஜே.சி.பி இயந்திரம் மூலம் பணிமேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.32000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2399/2022/எச்1)

**தீர்மானம் எண். 139. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

31. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு குப்பை அகற்றும் பணியில் இருந்த வண்டி எண்.டி.என்.77 ஜெ–6630 என்ற மின்டோர் ஆட்டோ பழுதுகளை சரிசெய்ய மெஸர்ஸ்.கிரிஸ்டல் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், சேலம் நிறுவனத்திடம் ரூ.82523/– விலைப்புள்ளி பெறப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.19, நாள்.29.04.2022ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் வாகனத்தின் பழுதுகளை சரிசெய்யும் பணியின்பொழுது கூடுதலாக பழுதுகளை நிவர்த்தி செய்ய வேண்டியிருப்பதால் அதற்குரிய செலவினம் ரூ.35000/– செலவினம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1300/2022/எச்1)

**தீர்மானம் எண். 140. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

32. இந்நகராட்சிக்கு சொந்தமான மண்டிகள் அறைகள் மேற்குபுற கட்டிடம் காலியாக உள்ளதால் 08.07.2022 ந் தேதி பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப் புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு உச்ச ஏல கேள்வி தொகை கேட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் விலாசம் | மாதவாடகை உச்சஏல கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு. சி.சின்னையன், த/பெ.சிங்காரம்<br>11/29, 74 கிருஷ்ணாபுரம், கெங்கவல்லி போஸ்ட் | ரூ.6100/– |
| 2 | திரு,ஜீ.ராஜேந்திரன், 72, காந்திநகர், ஆத்தூர் | ரூ.5800/– |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட இனத்திற்கு பொது ஏலத்தில் ரூ.6100/–த்தை கோரியுள்ள திரு.சி.சின்னையன்,த/பெ.சிங்காரம் அவர்களின் உச்ச ஏலக்கேள்வி தொகையினை மன்றம் ஏற்கலாம். ( 262/2022/அ4 )

**தீர்மானம் எண். 141. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

33. தேசிய மீன் வளர்ச்சி கழகத்தின் மூலம் இந்நகராட்சிக்கு சொந்தமான வண்டிபேட்டை பகுதியில் புதிதாக 18 கடைகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக நகராட்சி பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிமுடிக்கப்பட்ட 18 கடைகளை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் (2776/2022/அ4)

**தீர்மானம் எண். 142. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

34. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு காவலர் பணி மற்றும் நகர்முழுவதும் உள்ள மின்மோட்டார்களை இயக்குதல் ஆகிய பணிகளை இது நாள்வரை அலுவலக பணியாளர்கள் வாயிலாக செய்யப்பட்டு வந்தது. தற்சமயம் 209 ஆழ்துளை கிணறுகள் மற்றும் 9 மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் ஆகியன ஆத்தூர் நகராட்சியில் உள்ளதால் ஏற்கனவே பணி செய்த பொறியியல் பிரிவு பணியாளர் வயது முதிர்வு மற்றும் உடல் நிலை சரியில்லாமல் மரணம் அடைந்துள்ளதால் மேற்படி பணிகளை கவனிக்க போதிய ஆட்கள் இல்லை எனவே (Out sourcing) ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் 10 பணியாளர்களை 01.09.2022 முதல் 30.11.2022 முடிய 3 மாதங்களுக்கு பணியில் அமர்த்திக் கொள்ள ஆகும் செலவினத்திற்கு ரூ.6.10 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 2065 /2022/இ1)

**தீர்மானம் எண். 143. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

35. ஆத்தூர் நகராட்சி பகுதிகளில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 18856/2022/தூஇதி2, நாள் 13.07.2022ல் தூய்மை இந்தியாதிட்டம் 2.0த் திட்டம் 2022–2023ம் ஆண்டிற்கான இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டத்தில் கீழ்கண்டவாறு சிறுநீர் கழிப்பிடங்கள், சமூதாய கழிப்பிடங்கள், மற்றும் பொதுகழிப்பிடங்கள் புதியதாக கட்டுவதற்கு கீழ்கண்ட இடங்களை தேர்வு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் ஒப்புதலும் மேலும் மேற்படி பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் நிர்வாக அனுமதி வழங்க கோரி இப்பணிகளுக்கு தயார் செய்யப் பட்டுள்ள மதிப்பீடுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு வைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீத்தொகை ( இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்11ல் பூங்கோவலர் தெரு பகுதியில் புதியதாக பொதுக் கழிப்பிடம் கட்டும் பணி | ரூ.24.00 |
| 2 | ஆத்தூர்அரசுமருத்துவமனை அருகில் சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டும் பணி | ரூ.0.96 |

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், இப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெறவும் மன்றம் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2697/2022/இ1)

**தீர்மானம் எண். 144. நாள்.27.07.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

தலைவர்,
ஆத்தூர் நகர்மன்றம்.